Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**C.C.No.447/2019**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தெய்வசர்மா | ஜாதி | : |
| த/பெ | : | தொழில் | : வனச்சரக அலுவலர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர் |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : ஆத்தூர் | வயது | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2023.

(Accused A1, A2, A4 Present, A3 died)

முதல் விசாரணை தொடர்ச்சி

இவ்வழக்கில் நான் ஏற்கனவே முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன். மேலும், நாட்டுத்துப்பாக்கி அ.சா.பொ. 1 ஆகவும், செல்போன்கள் 4 எண்ணிக்கை அ.சா.பொ.2 ஆகவும், TN 39 W 4781 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super வாகனம் அ.சா.பொ.3 ஆகவும், நெற்றிலைட் 3 எண்ணிக்கை அ.சா.பொ.4 ஆகவும், ஈய டப்பாவில் அடைக்கப்பட்ட 50 கி. கரி மருந்து அ.சா.பொ. 5 ஆகவும், ஈயடப்பாவில் அடைக்கப்பட்ட 200 கி. சிறு ஈயத்துகள்கள் அ.சா.பொ.6 ஆகவும், தீப்பெட்டி 2 எண்ணிக்கை அ.சா.பொ.7 ஆகவும், அருவாள் ஒன்று அ.சா.பொ.8 ஆகவும், கத்தி ஒன்று அ.சா.பொ.9 ஆகவும், கTN 59 AE 2359 என்ற பதிவெண் கொண்ட Bajaj Platina இருசக்கர வாகனம் அ.சா.பொ.10 ஆகவும், TN 57 AF 1227 என்ற பதிவெண் கொண்ட TVS Max இருசக்கர வாகனம் அ.சா.பொ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட சான்று பொருட்களை கைப்பற்றிய H நமுனா அ.சா.ஆ.1 ஆகவும், CSIR-Centre for Cellular and MLolecular Biology, Uppal Road, Hyderabad, Telangana நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி வழங்கிய சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகவும், எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மயில் கறியின் புகைப்படம் அ.சா.ஆ.3 ஆகவும், ஸ்தல மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட மயில்கறியில் பகுப்பாய்விற்கு எடுத்து அனுப்பியது போக மீதமிருந்த மயில்கறியை கன்னிவாடி உதவி கால்நடை மருத்துவர் மூலம் எறித்து அழிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று இரவு 10.30மணியளவில் நான் எங்கிருந்தேன் என்றால் கன்னிவாடி வனசக்சரக அலுவலகத்தில் இருந்தேன். மேற்படி தகவலானது எனது கைபேசிக்கு வந்தது. என்ன தகவல் வந்தது என்றால் காப்பு காட்டில் ஒரு லைட் வெளிச்சம் தெரிவதாக தகவல் வந்தது. அந்த காப்புக்காட்டுக்கருகில் பட்டா தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொல்லி உள்ள லைட் வெளிச்சமானது பட்டா தோட்டங்களில் எரிந்தது தான் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட மருந்து டப்பாக்களில் இருந்த கருமருந்து தோட்டங்களில்மிருகங்கள் வரும்போது விரட்டுவதற்காக கீழே அடிக்க பயன்படுத்தப்படும் மருந்து என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நாட்டு துப்பாக்கியில் மேற்படி மருந்தை பயன்படுத்துவார்கள். சம்பவயிடத்தின் அருகே உள்ள வைகைபாம்ஸ் தோட்டத்தின் உரிமையாளர் மற்றும் அங்குள்ள பணியாளர்களை நான் விசாரித்தேனா என்றால் இல்லை சம்பவம் கன்னிவாடி பிளாக்1 காப்புகாட்டில் நடந்ததால் விசாரிக்க வேண்டியதில்லை. கன்னிவாடி வனச்சரகத்திற்கும் காப்புகாட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் 10 கிமீ உட்பட்டது. தகவல் கிடைத்தவுடன் எங்களது அரசு ஜீப்பில் 1/2 மணி நேரத்தில் சம்பவயிடத்திற்கு சென்று விட்டேன் என்று சொன்னால் சரிதான். சாத்தரப்பன் கோவில் அருகே என்ன இருந்தது என்றால் இரவு நேரம் என்பதால் எனக்கு தெரியவில்லை. வனக்காப்பாளர் சொன்னதன் அடிப்படையில் சம்பவயிடத்திற்கு சென்றோம். என்னுடன் கன்னிவாடி வனச்சரகத்திலிருந்து 5 பேர்கள் சென்றோம்.எதிரிகளையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களையும் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு எவ்வாறு அழைத்து சென்றோம் என்றால் எதிரிகளை என்னுடைய ஜீப்பிலும் அவர்களின் வாகனத்தை எங்களது வனச்சார்நிலை அலுவலர்கள் எடுத்து வந்தனர். ஒப்புதல்வாக்குமூலம் வனச்சரக அலுவலகத்தில் வைத்துதான் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். சான்று பொருட்கள் அல்லாது சமையல் செய்வதற்கான பொருட்கள் எதுவம் கைப்பற்றப்படவில்லையென்றால் சரிதான். இறந்த மயிலின் தோல் எதுவும் கைப்பற்றப்படவில்லையென்றால் சரிதான்.மற்றொரு பெண்மயில் நீதிமன்றத்தில் காட்டும்பொழுது உயிருடன் காயம்பட்டநிலையில் இருந்தது. சம்பவயிடத்தில் எதிரிகளிடம் கைப்பற்றப்பட்டதாக புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. காப்புகாடு என்பதால் உள்ளே அத்துமீறி நுழைந்து வேட்டையாடுவது குற்றம். 1,2, எதிரிகள் ரெண்டலைப்பாறை திண்டுக்கல்லை சேர்ந்தவர்கள் என்றும், 4வது எதிரி கோடல்டவாவி கிராமம் திண்டுக்கல்லை சேர்ந்தவர் என்றால் சரிதான். 3வது எதிரி வைகைபாம்ஸ்ஸில் தினக்கூலி வேலை பார்ப்பவர் என்றால் அவருடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் அங்கு வேலை பார்த்ததாக உள்ளது. அது அவர் சொன்னதை வைத்து நான் பதிவு செய்யப்பட்டது. எந்த எதிரியும் ஒப்பதல் வாக்குமூலம் கொடுக்கவில்லையென்றும், எதிரிகளை மிரட்டி எதுவும் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து பெறப்பட்டு பின்னிட்டு எங்களால் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல எதிரிகளிடமிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லையென்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் காப்புகாட்டிற்குள் அத்துமீறி நுழையவுமில்லை என்றும், எந்த தவறும் செய்யவில்லையென்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை வனச்சரக அலுவலகத்தில் வேலை பார்க்க சொல்லி அவர்கள் பாக்காததால் அந்த காழ்புணர்ச்சி காரணமாக மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரிகள் யாரும் கைது செய்யப்படவில்லைெ யன்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமுமம் இல்லைெ யன்றால் சரியல்ல.

**தேசிய பறவை வேட்டையாடபட்டதாக சமூகவலைதளங்களில் தகவல் பரிமாறப்பட்டதால் அழுத்தத்தின் காரணமாக எதிரிகள்மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.** சான்று பொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.3ன் புகைப்படம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வேறு ஒரு புகைப்படத்தில் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட இரண்டு மயில்களும் கரிமருந்தால் தான் இறந்தது என்று பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அந்த அறிக்கையை பார்த்தால் தான் தெரியும். இந்த காரணத்தினால் தான் மயில்கள் இறந்தது என்று பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அது எந்த உயிரினத்தின் கரி என்று தான் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor